
# நாம் செய்த மோசமான விஷயங்களை தேவனிடம் அறிக்கையிடுகிறோம்.

**யோவான் ஸ்நானகனின் ஊழியம்**



சிறுவர்களின் வயதுக்கும் தேவைக்கும் பொருத்தமான செயல் டுகளைத் தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே. ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பாவங்களை அறிக்கையிட உதவி புரியும். இதனால், அவர்களுடைய பாவத்தொடரை உடைத்து, அவமானத்தில் இருந்து அவர்களை விடுவித்து, கெட்ட பழக்கவழக்கங்களில் இருந்து விடுதலை செய்து, ஒவ்வொரு ஆண்பெண் பிள்ளைகளின் மனசாட்சியையும் சுத்தம் ஆக்குவீராக. கேட்டு, மன்னித்து, எங்கள் இருதயத்துக்கு சமாதானத்தை கொண்டு வருவீராக."



தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு, பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள எவ்வாறு யோவான் ஸ்நானகன் மக்களுக்கு உதவினான் என்பதை ஒரு பெரியவரோ பெரிய பிள்ளையோ கூறட்டும். **மத்தேயு 3:1-12, லூக்.3:10-18** ஐ வாசித்து போதிப்பதற்கு ஆயத்தமாகுக. கதையைக் கூறியபின் பிள்ளைகளிடம் கேட்க வேண்டிய கேள்விகள்.

- யோவான் ஸ்நானகன் எங்கு மக்களுக்கு போதித்தான்? (மத்.3:1)
- என்ன செய்ய வேண்டும் என்று அவன் மக்களுக்குக் கூறினான்? (3:1)
- மனம்திரும்பியதைக் காட்டுவதற்கு அவர்கள் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் எவை? (3:6)
- மனந்திரும்புதல் என்பதற்கு அர்த்தம் என்ன? (பாவத்தை விட்டு விலகி தேவனுக்குக் கீழ்ப்படிதல்)
- தாங்கள் நல்லவர்களாய் இருப்பதால் தங்கள் பாவங்களை அறிக்கையிடத் தேவை இல்லை என்று நினைத்த மக்களை யோவான் எவ்வாறு அழைத்தான்? (மத்.3:7-11 அவன் அவர்களை பாம்புகள் என அழைத்தான். அவர்களுக்கு ஞானஸ்நானம் தர மறுத்து, வரும் நியாயத் தீர்ப்பைக் குறித்து எச்சரித்தான்).
- "எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராய் இருக்கிறார்" என்று யோவான் யாரைப் பற்றி கூறுகிறான்? (இயேசுவைப் பற்றி).
- இயேசு என்ன செய்வார் என்று யோவான் கூறினான்? (மத்.3:11-12. மனந்திரும்புகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் இயேசு ஞானஸ்நானம் கொடுப்பார். மற்றவர்களுக்கு நியாயத் தீர்ப்பையும் தண்டனையையும் கொண்டு வருவார்).
- தாங்கள் மனம் திரும்பியதைக்காட்ட என்ன செய்ய வேண்டும் என்று மக்கள் கூட்டத்திடம் யோவான் கூறினான்? (லூக்.3:10-11).
- ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்ட பேராசை பிடித்த ஆயக்காரர்களிடம், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று யோவான் கூறினான்? (லூக். 3:12-13).
- போர்ச்சேவகர்களிடம் என்ன செய்ய வேண்டும் என்று யோவான் கூறினான்? (லூக்.3:14)

தங்கள் பாவங்களை அறிக்கையிட்ட மக்களுடைய கதையின் பகுதிகளை நாடகமாக்குக.

- பிள்ளைகள் நாடகத்தை ஆராதனை வேளையில் பெரியவர்களுக்கு நடித்துக் காட்ட சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.

- உங்கள் போதனை நேரத்தை பிள்ளைகளுடன் செலவிட்டு நாடகத்தை ஆயத்தம் செய்க.
- பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு தயாரிப்பதில் உதவி செய்யவும்.
- **பெரியவர்கள் அல்லது பெரியபிள்ளைகள்** யோவான், பரிசேயர், கதைகூறுபவர், சிறுபெண், ஆகிய பாத்திரங்களை ஏற்கலாம்.
- **சிறிய பிள்ளைகள்**, ஆயக்காரன், போர்ச்சேவகன், யூதேயா நாட்டு மக்கள் ஆகிய வேடத்தை ஏற்கவும்.

**கதை கூறுபவர்:** மத்.3:1-12ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின் கூறவேண்டியது, “எருசலேமைச் சேர்ந்த மனந்திரும்பிய ஒரு சிறுபெண் கூறுவதைக் கேளுங்கள்.”

**சிறுபெண் :** “எருசலேம் மற்றும் யூதேயாவில் வாழும் நாங்கள் அநேக மோசமான விஷயங்களை செய்திருக்கிறோம். ஆனால் எங்களில் பலர் மனமாறி தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம். நான் என் பாவத்தை அறிக்கையிட விரும்புகிறேன்.!”

**யோவான்:** “தேவன் உன்னை மன்னித்து விட்டார். வந்து ஞானஸ்நானம் எடுத்துக் கொள்!”

**பரிசேயன்:** (பெருமையோடு பேசுகிறான்). “பரிசேயர்களாகிய நாங்கள் மதத் தலைவர்கள். நாங்கள் நல்ல வாழ்க்கை வாழ்கிறோம். நல்ல காரியங்களைச் செய்து தேவனின் தயவைப் பெற்றதால் நாங்களும் ஞானஸ்நானம் பெறுவோம்!”

**யோவான்:** “விரியன் பாம்பு குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். தேவனுக்கு பயந்து நடவுங்கள்!”

**கதை கூறுபவர்:** லூக்.3:10-18 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின் கூறவும், “ஒரு பேராசை பிடித்த ஆயக்காரன் கூறுவதைக் கேளுங்கள்!”

**ஆயக்காரன்:** “நாங்கள் சுயநலமான மோச காரியங்களை செய்து விட்டோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும்?”

**யோவான்:** “உங்களுக்கு விதிக்கப்பட்டதை தவிர கூடுதல் பணம் வசூலிக்க வேண்டாம். நீ உன் பாவத்தை அறிக்கை இட்டு விட்டாய். தேவன் உன்னை மன்னித்து விட்டார். வந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்!”

**போர்ச்சேவகன்:** “போர்ச் சேவகர்களாகிய நாங்கள் என்ன செய்வது? நாங்களும் அதிகமாகப் பாவம் செய்து விட்டோம்!”

**யோவான்:** “பலவந்தமாய் யாரிடமும் பணம் வாங்காதீர்கள். யாரையும் பொய்யாய் குற்றம் சாட்டாதீர்கள். உங்கள் சம்பளமே போதும் என்று இருங்கள். நீ உன் பாவத்தை அறிக்கையிட்டு விட்டாய். வந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்!”



கதை கூறுபவர்: நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுக.

**கேள்விகள்:** குழந்தைகள் இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளை சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும்.

**படம் வரைக:** அக்கினியின் படத்தை வரைந்து ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் காட்டவும்.

இயேசு இறந்தோரை எழுப்பும் போது அது அறுவடை போல் இருக்கும் என்று விளக்கவும்.

- விசுவாசிகள் இயேசுவோடு நித்தியமாக வாழ்வார்கள்.

- அறுவடையின் போது பதரையும் தானியத்தையும் பிரிப்பது போல, அவரை விசுவாசியாதவர்களை தேவன் தனியாகப் பிரிப்பார்.

**சங்கீதம் :** 51 ன் வசனங்களை குழந்தைகள் ஒப்புவிக்கட்டும்.

2: என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்தி கரியும்.

3: என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

4: தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்.

5: இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்.

7: நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும். அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும். அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மை ஆவேன்.

10: தேவனே சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும். நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

**பெரிய பிள்ளைகள்:** பாவ அறிக்கையையும் பாவமன்னிப்பையும் குறித்து கவிதைகள் எழுதட்டும்.

**மனன வசனம்:** சங்.51:10

Copyright 2005 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net

